2016 பிப்ரவரி 18] [திரு. பி.ஜி. நாராயணன்]

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செல்வி கே. பாலபாரதி, இன்று காலையில்தான் உங்கள் கட்சி உறுப்பினர் என்னிடம் அறிவிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். (குறுக்கீடுகள்) இன்று காலையில்தான் கொடுத்தார். (குறுக்கீடுகள்)*

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. பி.ஜி. நாராயணன்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று ஐம்பத்தொன்பதாவது முதல் இருநூற்று எழுபத்திரண்டாவது வரையிலான 14 அறிக்கைகளை, குழு அதிகாரம் அளித்துள்ளவாறு, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

8. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016–2017 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு, தே.மு.தி.க. சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய தலைவர் கேப்டன் அவர்களுக்கும், சட்டமன்றத்திற்குள் மீண்டும் நான் காலடி எடுத்து வைப்பதற்கு உத்தரவிட்டு தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதியரசர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன்.